# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

# O.S.No.5/2022

DW2– பரமசிவம் நாள்: 20.01.2025

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் அப்பா பெயர் முத்துசாமி. அவருக்கு இரண்டு மனைவிகள். அவரின் முதல் தாரத்து பெயர் எனக்கு தெரியாது. இரண்டாம் தாரத்தின் பெயர் சிந்தாமணி. அவர் என் தாயார். சிந்தாமணிக்கு நான்கு பிள்ளைகள். சுசிலா, பரமசிவம், சதாசிவம், பாப்பாத்தி ஆகியோர் சிந்தாமணியின் பிள்ளைகள். 1964 ல் வழக்கு சொத்துக்கள் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதாக என் சித்தப்பா சொல்லிதான் எனக்கு தெரியும். வி.களத்தூர் கிராம சர்வே எண்கள் தவிர வேறு எனக்கு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். என் வழக்கறிஞரிடம் நான் தான் விவரங்கள் சொன்னேன். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா 8 முதல் 12 வரை உள்ள சொத்துக்களை என் சித்தப்பா அய்யம்பெருமாள் அனுபவிக்கிறாரா என்று எனக்கு தெரியாது. நான் வக்கீலிடம் விவரங்கள் சொன்னபோது எந்தெந்த சொத்துக்களை அனுபவிக்கிறேன் என்று சொன்னேன். தாவா சொத்துக்களின் கிராம சர்வே எண்கள் எனக்கு மனப்பாடமாக தெரியாது. நான் அனுபவித்துவரும் சொத்துக்களின் சர்வே எண்ணும் எனக்கு மனப்பாடமாக தெரியாது. நான் என் மனைவிக்கு தானமாக எழுதிக் கொடுத்த சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. என் சித்தப்பா ஆறுமுகம் எந்தெந்த சர்வே எண் சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. 2020 ஆம் ஆண்டு என் மனைவி தென்னரசிக்கு தானமாக சொத்து எழுதிக்கொடுத்தேன். 8 ஏக்கர் 92 சென்ட் எழுதிக்கொடுத்தேன். அய்யம்பெருமாளும் அவருடைய சொத்துக்களை அவருடைய மகனுக்கு தானமாக கொடுத்தார் என்று எனக்கு தெரியும். எவ்வளவு

நிலங்கள் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வயல்நிலமும், மேட்டுநிலமும் எழுதிக்கொடுத்தார். என் சித்தப்பா ஆறுமுகம் 1980ல் சுமார் 3 ஏக்கர் நிலத்தை விற்றார். ஆறுமுகம் பாகத்தை பிரித்துக்கொண்டு சொத்தை விற்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சொ'ல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் சாமிராஜ் என்பவரிடம் 30 சென்ட் நிலத்தை தான் விற்றார் என்றால் சரியல்ல நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் வாய்மொழியாக கூட பாகத்தை சமமாக பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் என் மனைவிக்கு எழுதிக்கொடுத்த சொத்தை 4 நாட்களுக்கு பிறகு என் பெயருக்கே மீண்டும் மாற்றிக்கொண்டேன். அதை வைத்து நான் கடன் வாங்கினேன். ஆறுமுகத்தின் பிள்ளைகளை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக தான் நான் பத்திரங்களை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதேபோல அய்யம்பெருமாளும் எதற்காக அவரது மகனுக்கு சொத்து எழுதிவைத்தார் என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.